**பன்னாட்டு மன்னிப்பு அவை**

**பத்திரிகை வெளியீடு**

**13 ஜூலை, 2023 அன்று GMT 00:01 க்குத் தடை விதிக்கப்பட்டது**

## இலங்கை: அனைத்து கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களுக்கும் போதுமான ஊட்டச்சத்துக்கான அணுகலை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும்

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், அனைத்து கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களுக்கும் போதிய ஊட்டச்சத்துக்கான அணுகலை இலங்கை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என பன்னாட்டு மன்னிப்பு அவை இன்று புதிய ஆய்வு அறிக்கையில் தெரிவித்துள்ளது..

'வாழ்வதற்கு ஏதுவான குறிப்பிடப்பட்ட உணவுவேளைகள் (Foregoing Meals to Make-Do)' என்ற விளக்க அறிக்கை, கொழும்பில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் பெண்கள் மீது குறிப்பாகக் கவனம் செலுத்தி, கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களுக்கு ஊட்டச்சத்துக்கான அணுகலில் பொருளாதார நெருக்கடியின் தாக்கம் குறித்து ஆராய்கின்றது. வீழ்ச்சியடைந்த வருமானம், வாழ்வாதார இழப்பு மற்றும் பணவீக்கம் ஆகியவை பெண்களின் கொள்வனவுத் திறனைக் குறைத்துள்ளன, அதே நேரத்தில் தாய்வழி ஊட்டச்சத்தை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்ட திட்டங்களும் இந்த நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளன.

"இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் தீவிரம் காரணமாக, சுகாதாரம் மற்றும் போஷாக்கு ஆகியன பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது. கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வில் இந்த நிலைமை பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. நெருக்கடியின் காரணமாக ஒரு வருட இடைவெளியில் வறுமை வீதங்கள் இருமடங்காக அதிகரிக்கப்பட்டிருக்கின்றது, நெருக்கடியால் இந்த நபர்களும் விகிதாச்சாரத்தன்மை அற்ற வகையில் பாதிக்கப்பட்டுள்ளனர், "என்று பன்னாட்டு மன்னிப்பு அவையின் தெற்காசியாவிற்கான பிரதிப் பிராந்தியப் பணிப்பாளர் தினுஷிகா திஸாநாயக தெரிவித்தார்.

பன்னாட்டு மன்னிப்பு அவை இந்த விளக்க அறிக்கைக்காகச் சுகாதாரப் பணியாளர்கள், சிவில் சமூக உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு இன மற்றும் மத பின்னணியைச் சேர்ந்த கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்கள் உட்பட 45 பேரை நேர்காணல் மேற்கொண்டது.

**'நாங்கள் எப்படியாவது ஒரு உணவுவேளையைக் கைவிட முயற்சிக்கின்றோம்'**

பன்னாட்டு மன்னிப்பு அவை நேர்காணல் மேற்கொண்ட பெண்கள் உணவுக்கான கட்டுப்படியாகாத தன்மை, 'திரிபோஷா' மிகை நிரப்பு உணவுகளின் சீரற்ற விநியோகம் மற்றும் அரசாங்கத் திட்டங்களின் மூலம் வழங்கப்படும் உணவு வவுச்சர்களை மீட்டெடுக்க இயலாமை குறித்துத் தமது கவலைகளை எழுப்பினார்கள்.

கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்கள், உணவின் அதிக விலை காரணமாகப் பரிந்துரைக்கப்பட்ட தினசரி அளவு ஊட்டச்சத்துக்களை உட்கொள்வதை விட, "தங்கள் வயிற்றை நிரப்புவதை" நோக்கமாகக் கொண்டதாகக் கூறினர். ஒரு நாளைக்கு மூன்று வேளை உணவு உண்பதற்காக, பலர் உணவின் அளவைக் கட்டுப்படுத்த விரும்பினர், சிலர் தினசரி உணவு வேளையின் எண்ணிக்கையை இரண்டாகக் குறைத்தனர். ஒரு தாய்ப்பாலூட்டும் பெண்  பன்னாட்டு மன்னிப்பு அவையிடம் இவ்வாறு கூறினார்: "நாங்கள் காலை உணவையும் இரவு உணவையும் சாப்பிடுகிறோம், மதிய உணவைத் தவிர்க்க முயற்சிக்கின்றோம்... நாங்கள் ஒரு கப் தேநீருடன் மதிய உணவாக பிஸ்கட் சாப்பிடுகின்றோம்."

பன்னாட்டு மன்னிப்பு அவை நேர்காணலை மேற்கொண்ட அனைத்து வீட்டினரும் இறைச்சி, காய்கறிகள், பழங்கள் மற்றும் பால் நுகர்வு வெகுவாகக் குறைந்துள்ளது என்று கூறினர். இத்தகைய பற்றாக்குறை ஊட்டச்சத்துக் குறைபாடுகளுக்கான அபாயத்தை அதிகரிக்கின்றது, இது கருவிலுள்ள சிசுவின் வளர்ச்சியைப் பாதிக்க முடியும். முன்பு வாராந்த அடிப்படையில் இறைச்சி அல்லது மீனை உட்கொண்ட குடும்பங்கள் இப்போது மாதத்திற்கு ஒருமுறை அல்லது பணம் கிடைக்கும் போது மட்டுமே அவற்றை உட்கொள்கின்றன. மற்றொரு பாலூட்டும் பெண் இவ்வாறு கூறினார்: "எங்களால் பாலை அதிகரிக்கின்ற உணவை வாங்க முடியாது. மீன் விலை உயர்ந்தது என்பதை நீங்கள் காணகின்றீர்கள்.

எனவே, எங்களிடம் உள்ள பணத்திற்கு எங்களால் முடிந்ததை நாங்கள் வாங்குகின்றோம்.”

பன்னாட்டு மன்னிப்பு அவை நேர்காணல் மேற்கொண்ட பெரும்பாலான கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் பெண்கள், அவர்கள் வேலையில்லாமல் இருப்பதாகவும், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அவர்களின் கணவர்களுக்கு வழக்கமான வருமானம் இல்லை என்றும் கூறினர்.

பெப்ரவரி 2023 இல், கர்ப்பிணி மற்றும் தாய்ப்பால் கொடுப்பவர்கள் பன்னாட்டு மன்னிப்பு அவையிடம், பொதுவாக கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களுக்கு வழங்கப்படும் அரசாங்க உணவு வவுச்சர்களை அரசின் நிதிப் பற்றாக்குறையால் மீட்டெடுக்க முடியாது என்று கூறினர்.

பன்னாட்டு மன்னிப்பு அவை பெண்கள் அமைச்சகம், சுகாதார அமைச்சகம் மற்றும் பொது நிர்வாக அமைச்சகம் ஆகியவற்றிற்கு இந்தக் கவலைகளை எழுப்பிக் கடிதம் எழுதியது, ஆனால் இது வெளியிடப்பட்ட நேரத்தில் அதற்கான பதில் கிடைக்கவில்லை.

**‘நாங்கள் நோயாளர்கள் அல்லல்படுவதைப் பார்க்க வேண்டியிருக்கின்றது’**

மருந்துகள் மற்றும் உபகரணங்களின் பற்றாக்குறையால் இலங்கையின் பொதுச் சுகாதார அமைப்பும் பாதிக்கப்பட்டுள்ளது. தாய்வழிப் பராமரிப்பை வழங்கும் சுகாதாரப் பணியாளர்கள் பன்னாட்டு மன்னிப்பு அவையிடம், அத்தியாவசியமற்ற அறுவை சிகிச்சைகள் மற்றும் நடைமுறைகளை நிறுத்த வேண்டும், தாமதப்படுத்த வேண்டும் அல்லது ஒத்திவைக்க வேண்டும் என்று கூறினர். எதிர்காலப் பொருட்கள் நிச்சயமற்றதாக இருப்பதால், அவசரகால நிகழ்வுகளுக்கு மருந்துகளை ஒதுக்க வேண்டும் என்று கூறிய ஒரு மருத்துவர், பன்னாட்டு மன்னிப்பு அவையிடம் இவ்வாறு கூறினார்: "நோயாளிகள் அவதிப்படுவதை நாங்கள் பார்க்க வேண்டியிருக்கின்றது, எங்களால் எதுவும் செய்ய முடியாது."

அரசு நடத்தும் மருத்துவமனைகளில் பொருட்கள் தீர்ந்துவிட்டதால், சுகாதாரப் பணியாளர்கள் உபகரணங்களை மீண்டும் பயன்படுத்துகின்றனர் அல்லது தனியார் மருந்தகங்களில் இருந்து மருந்து அல்லது உபகரணங்களை வாங்குமாறு நோயாளிகளிடம் கூறியதாக பன்னாட்டு மன்னிப்பு அவை கண்டறிந்துள்ளது.

இதேவேளை, விலையேற்றம் மற்றும் இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி காரணமாக தனியார் மருந்தகங்களில் உள்ள மருந்துகள் பெரும்பாலானோருக்குக் கட்டுப்படியாக முடியாத நிலையிலேயே உள்ளது.

பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான உடன்படிக்கை (CEDAW) மற்றும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை (ICESCR) உட்பட கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களுக்குப் போதுமான சுகாதாரம் மற்றும் உணவுக்கான அணுகலை உறுதிசெய்யும் பல சர்வதேச ஒப்பந்தங்களை இலங்கை அங்கீகரித்துள்ளது.

"நீண்டகால உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் போதிய ஊட்டச்சத்து ஆகியவை கவனிக்கப்படாமல் விட்டால், தாய்மார்கள் மற்றும் அவர்களது குழந்தைகளுக்கு கடுமையான நீண்டகாலப் பின்விளைவுகளுக்கு அவை வழிவகுக்கும். கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களுக்குப் போதுமான, மலிவான மற்றும் நல்ல தரமான போஷாக்குக்கான அணுகலை உறுதி செய்தல் உட்பட, இலங்கை அரசாங்கம் தனது சர்வதேச மனித உரிமைக் கடமைகளை அவசரமாக நிறைவேற்ற வேண்டும். கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் பெண்களுக்கு போதிய உணவு மற்றும் போஷாக்கை கிடைப்பதை உறுதி செய்வதற்குச் சர்வதேச சமூகமும் அரசாங்கத்திற்கு ஆதரவாகப் பங்களிக்க வேண்டும்" என தினுஷிகா திஸாநாயக தெரிவித்தார்.